## மெட்ரோ ரயில் நிறுவனம் வரும் டிசம்பருக்குள்

# 6 மெகாவாட் சோலார் மின்உற்பத்தி செய்ய இலக்கு

## ● சோலார் கருவிகள் பொருத்தப்பட்டு வருவதாக அதிகாரிகள் தகவல்

■ சென்னை

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் வரும் டிசம்பருக்குள் 6 மெகா வாட் சோலார் மின்உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயித்துள்ளது.

இதுதொடர்பாக மெட்ரோ ரயில் அதிகாரிகள் கூறியதாவது:

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்துக்கு சொந்தமான வாய்ப்புள்ள இடங்களில் சோலார் கருவிகள் அமைத்து மின்சாரம் உற்பத்தி செய்யும் வகையில் திட்டப்பணிகளை நிர்வாகம் மேற்கொண்டு வருகிறது. சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் வகையில் எல்இடி விளக்குகள் பொருத்துதல், புதுப்பிக்கத்தக்க எரிசக்திகளை பயன்படுத்தி வருகிறது.

சைதாப்பேட்டை பேருந்து நிலையத்தின் மேற்கூரைகளில் சோலார் கருவிகள் பொருத்தும் பணி நடைபெற்று வருகிறது. மெட்ரோ ரயில் நிலையங்களில் மேற்கூரைகள் உட்பட பல்வேறு இடங்களில் சோலார் கருவிகள் நிறுவப்பட்டு வருகின்றன. ஏற்கெனவே கோயம்பேடு மெட்ரோ பணிமனையில் ஒரு மெகா வாட் அளவுக்கு சோலார் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.

தற்போது இதே வளாகத்தின் மற்றொரு பகுதியில் 350 கிலோவாட் அளவுக்கு சோலார் கருவிகள் நிறுவப்பட்டுள்ளன. இதன்மூலம் மாதம்தோறும் 45 ஆயிரம் யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும். இதனால், 5 லட்சம் யூனிட் மின்சாரம் கிடைப்பதன் மூலம் மின்சாரக் கட்டணம் ரூ.19.50 லட்சத்தை சேமிக்க முடியும்.

### மாதம்தோறும் 1.35 லட்சம் யூனிட்

ஏற்கெனவே முடிக்கப்பட்ட பல்வேறு சோலார் மின்திட்டங்கள் மூலம் இதுவரையில் மாதம்தோறும் 1.35 லட்சம் யூனிட் மின்சாரம் கிடைக்கிறது. இதன்மூலம் ஆண்டுக்கு ரூ.21.6 லட்சம் சேமிக்க முடியும். இந்த ஆண்டு இறுதிக்குள் புதியதாக 6 மெகா வாட் அளவுக்கு சோலார் கருவிகள் நிறுவி மின்சாரம் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயித்துள்ளோம்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.



▲ சென்னை கோயம்பேட்டில் உள்ள மெட்ரோ ரயில் பணிமனையில் அமைக்கப்பட்டுள்ள சோலார் கருவிகள்.